முதன்மை மாவட்ட உரிமைமுதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திருநெல்வேலி

அ.வ.எண். 115/2017

2021 வது ஆண்டு அக்டோபர் மாதம் 01ம் நாள் D.W2ன் சாட்சிய வாக்கு மூலம் (1969ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது (பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு. சுப்பு (தாசில்தார், மானூர்)1) | வட்டம் : | திருநெல்வேலி |
| தந்தைபெயர்: | முத்து கிருஷ்ணன் | கிராமம் : | |
| வயது : | 54 | மதம் : | |

**01.10.2021 முதல் விசாரணை:**

**நான் மானூர் தாசில்தாராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் கண்ட படி கானார்பட்டி கிராமம், சர்வே எண். 189/1, 2 ன் அடங்கல் கொண்டு வந்துள்ளேன்.அது சா.சா.ஆ.1 ஆகும். அந்த அடங்கலின் படி சர்வே எண். 189/1 சந்தியாகு, த/பெ, யோசோப் என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண். 189/2 ஆ.மிக்கேல் த/பெ. ஆவேல் ஆதன் என்பவர் பெயரில் உள்ளது. அதற்குரிய கணிணி பட்டா தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.2 ஆகும். சர்வே எண். 189/1ல் மொத்த விஸ்தீரணம் 4 ஏர்ஸ் உள்ளது. சர்வே எண். 189/2ல் 1 ஹெக்டேர் 40 ஏர்ஸ் மொத்த விஸ்தீரணம் ஆகும். சர்வே எண். 189 எந்த ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 06.05.1994 ல் உட்பிரிவு செய்யப்பட்டது. அந்த உட்பிரிவு உத்தரவு நகல் சா.சா.ஆ.3 ஆகும்.**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை:

**சர்வே எண். 189ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 57 செண்டு ஆகும். சா.சா.ஆ.3க்கு முன்பு உட் பிரிவு தொடர்பான ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது**

என்றால் அது பற்றிய ஆவணங்கள் கோப்பில் இல்லை. உட் பிரிவிற்கு முன் யார் யாருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அது தொடர்பான ஆவணங்களும் கோப்பில் இல்லை. சர்வே எண். 189 ன் உரிமையாளர் யார் என்றால் மிக்கேல் மற்றும் சந்தியாகு ஆவர். அதற்கு ஆவணங்கள் கோப்பில் இல்லை. சரியான ஆவணங்கள் இல்லாமல் உட்பிரிவு செய்துள்ளோம் என்றும் இது தொடர்பாக சந்தியாகு பலமுறை விஸ்தீரணம் தவறு என்று முறையிட்டும் சரி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தவறு இருந்தால் அதை மேல் முறையீடு செய்து தாசில்தார் சரி செய்ய முடியும். வாதி பலமுறை உட்பிரிவு செய்ததில் அளவுகளில் தவறு உள்ளது என்றும் மேற்படி சர்வே எண்ணில் விஸ்தீரணம் வாதிக்கு சொந்தமானது எனவும் தவறை சரி செய்யுமாறும் பலமுறை வாதி மனு கொடுத்தும் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ.1 எந்த ஆவணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்று நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதி பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டதற்கான விளக்கமும் நான் சரியாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்களில் உள்ள தவறை சரி செய்து கொடுக்க சட்டப்படி கடமை உள்ளது என்றால் அது தொடர்பாக விண்ணபத்தில் சரி செய்து கொடுக்க முடியும். நான் முழுமையான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் எங்களது தவறுகளால் வாதி தான் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.